

கடலூர்மாவட்டம், திட்டக்குடிசட்டமன்றத்தொகுதி, ரெட்டாக்குறிச்சி கிராமத்தில் இடி – மின்னல் தாக்கியதில் சுப்பிரமணியன் அவர்களின் வீடு முழுவதும் எரிந்து சேதமடைந்த வீட்டை தொழிலாளர் நலன்மற்றும்திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேரில் சென்று பார்வையிட்டு நிதியுதவி மற்றும் நலத்திட்டஉதவிகள் வழங்கி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், சி.மெய்யூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்ட ரூ.18.88 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. திறந்து வைத்து 119 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ம.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டின் மாம்பழ விவசாயிகள் –

# மாம்பழ ஏற்றுமதி மதிப்புக்கூட்டு பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துவீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக்.15-**

**தமிழ்நாட்டில் மாம்பழ விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்துவோர் நலன் கருதியும் மாம்பழ ஏற்றுமதி மற்றும் மதிப்புக்கூட்டுப் பொருட்களை உற்பத்தியை மேம்படுத்தும் வகையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.10.2025 அன்று கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், 2025-ஆம் ஆண்டின் மாம்பழப் பருவத்தில் மா விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றிய அரசின் தலையீட்டைக் கோரி 24.06.2025 அன்று தாம் எழுதியிருந்த கடிதத்தினை சுட்டிக்காட்டியுள்ளார். அதன் அடிப்படையில், பதப்படுத்தக்கூடிய மாம்பழ வகைகளை பயிரிட்ட விவசாயிகள், மாம்பழம் கொள்முதல் விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சி யாலும், மாம்பழக்கூழ் மிகக் குறைவான அளவில் கொள்முதல் செய்யப்பட்டதாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர் என்றும் கடந்த ஆண்டு நடந்தது போலவே இந்தப் பருவத்திலும் மா விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் ஒரு முக்கிய பகுதியாக இக்கடிதத்தை தாம் எழுதுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது முந்தைய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தபடி, இந்தியாவில் விற்கப்படும் மாம்பழ பானத்தில் உள்ள பழக்கூழின் அளவு, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) விதிமுறைகளைப் பின்பற்றாமல், பேக்கேஜ் செய்யப்பட்ட மாம்பழச் சாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், பானங்களில் மாம்பழக்கூழ் சேர்க்கப்படுவதில் FSSAI தரநிலைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளைப் பிறப்பிக்குமாறு இந்திய அரசைக் தாம் கேட்டுக்கொண்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இது குறித்த தனது கடிதத்திற்கு இன்னும் நேர்மறையான பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, மா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், நம்நாட்டில் இந்த பானத்தை அதிக அளவில் பயன்படுத்தும் நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டும், மாம்பழங்களை அடிப்படையாகக் கொண்ட பான உற்பத்தித் தொழிலில் குறைந்த பட்சம் 18 முதல் 20 சதவீதம் வரை பழக்கூழ் உள்ளடக்கத்தை உறுதிசெய்ய அறிவுறுத்தப்பட வேண்டும் என்று தாம் கேட்டுக்கொள்வதாகவும் அதனால் அப்பானத்தின் தரமும் மேம்படும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் மாம்பழ ஏற்றுமதிக் கொள்கையானது மாம்பழ வகை ஏற்றுமதியை மேம்படுத்துவதிலும், மாம்பழப் பொருட்களை பல்வகைப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதாகவும், அதற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமும், ஏற்றுமதி தரநிலைகளுக்கு இணங்க செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் சாத்தியப்படும் என்றும் அத்தகைய நடவடிக்கைகள் மாம்பழங்களுக்கு அதிக மதிப்பைச் சேர்க்கும் அதே வேளையில், மாம்பழக்கூழ் தொழில்களை அதிகமாகச் சார்ந்திருப்பதையும் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இந்த முயற்சிகளை மேலும் வலுப்படுத்திட இந்திய அரசின் வணிக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), ஒருங்கிணைந்த பேக்கிங் செய்யும் வசதிகள், உள்நாட்டு கொள்கலன் கிடங்குகள், குளிரூட்டப்பட்ட துறைமுகங்கள், தரச் சோதனை ஆய்வகங்கள், வாங்குபவர் - விற்பனையாளர் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல், வெளிநாட்டு வாங்குபவர்களை அடையாளம் காணுதல் மற்றும் ஏற்றுமதி தரநிலைகள் குறித்த திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் அவர்கள் இத்தருணத்தில் தலையிட்டு, மா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், மேம்பட்ட ஏற்றுமதி மற்றும் மதிப்புக் கூட்டல் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய உதவிடுமாறும் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் – நிதியுதவி!

சென்னை, அக். 16 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வில்வித்தி மதுரா புதூர் கிராமத்தில் வசிக்கும் சுப்பிரமணியன் (வயது 47) த/பெ.சடையன் என்பவர் கடந்த 12.10.2025 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் அவரது வீட்டிற்கு வெளிப்புறத்தில் ஈரத்துணியினை கொடியில் போடுவதற்கு முற்படும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சுப்பிரமணியன் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள்

# பொதுமக்கள் எளிதில் பயணிக்கும் வகையில் 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவை!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

விழுப்புரம், அக். 16-

விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், பொதுமக்கள் எளிதில் பயணிக்கும் வகையில் 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், மற்றும் பொதுமக்கள் எளிதில் பயணிக்கும் வகையில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள வில்லியனூர், பண்ருட்டி, செஞ்சி, வேட்டவலம் ஆகிய வழித்தடங்களில் கூடுதலாக புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவை தொடக்க விழா நிகழ்ச்சிவிழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள வழித்தடங்களில் கூடுதலாக 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் ஜெய்சங்கர், துணை மேலாளர்கள் சிவகுமார், அறிவண்ணன், துணை மேலாளர் ரமேஷ், உதவி மேலாளர்கள் சிவராமன், வாசுதேவன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் கிராம சபைக் கூட்டம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், அக். 16 –

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்களபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே தமிழக முதல்வரின் கிராமங்கள் தோறும் கிராம சபை கூட்டம் காணொலிக் காட்சி தொடங்கி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். மேலும் பொது மக்கள் இடத்தில் மனுக்களை பெற்று கடந்த தமிழக அரசின் நலத்திட்டங்கள், தமிழக முதல்வரின் பல்வேறு சிறப்பு மிகு திட்டங்கள் குறித்தும் பொதுமக்களிடத்தில் எடுத்து கூறினார். தொடர்ந்து இந்த அரசு மக்களுக்காக பல்வேறு அரசு நலத் திட்டங்களை வழங்கி வருகிறது அதனை பொதுமக்கள் பயன்படுத்தி நீங்கள் சிறப்பாக வாழ்க்கை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஒன்றிய கழகச் செயலாளருமான கே.பி. ராமசுவாமி, திட்ட இயக்குனர் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம ஊராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், அரசம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் என்பவரின் மகள் செல்வி சௌமியா (வயது 14) என்பவர் 10.10.2025 அன்று பூட்டை கிராம எல்லையில் இருக்கும் ஆற்றில் துணி துவைத்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக வலிப்பு ஏற்பட்டு ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தார், இதனை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறுமியின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்ட நிலையில், தா.உதயசூரியன் 13.10.2025 திங்கள் கிழமை அன்று நேரில் சென்று சிறுமியின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி, ரூ.3 லட்சம் வரைவுக் காசோலை வழங்கினார்.



விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், பொதுமக்கள் எளிதில் பயணிக்கும் வகையில் 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன்தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் ஜெய்சங்கர், துணை மேலாளர்கள் சிவகுமார், அறிவண்ணன், துணை மேலாளர் ரமேஷ்,உதவி மேலாளர்கள் சிவராமன், வாசுதேவன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டத்தில் கடும் மழை!

## கழகத்தினர் நிவாரணப் பணி!

நீலகிரி, அக். 16 –

நீலகிரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமடையின் காரணமாக கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது நேற்று நள்ளிரவு கடுமையான மழையின் காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

உதகை குன்னூர் தேசிய நெடுஞ்சாலையில் மழைகாரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது நள்ளிரவு நேரம் என்பதால் போக்குவரத்து குறைந்திருந்த காரணத்தினாலும் மழையின் தர்க்கம் சற்றே தனித்து இருந்த காரணத்தினால் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை

இந்நிலையில் நிலச்ச ரிவு ஏற்பட்ட உடன் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு தகவல் கொடுத்து உடனடியாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ள இடத்தில் சாலை சீரமைக்கும் பணியை செய்தனர்.

தொடர்ந்து நகராட்சிக்குட்பட்ட மாடல் ஹவுஸ் பகுதியிலும் நிலச்சரிவு ஏற்பட்டது இதை அடுத்து அந்த நள்ளிரவு நேரத்திலும் குன்னூர் நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா மற்றும் அந்த பகுதியினுடைய கழகத் தோழர்கள் அந்த பகுதிக்கு விரைந்து வந்து மேலும் நிலச்சரிவுகள் ஏற்படாமல் மண் மூட்டைகள் அடுக்கி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக முடக்கி விட்டார்.

இதன் காரணமாக நள்ளிரவில் ஏற்பட்ட இந்த சேதங்கள் நகராட்சி துணைத் தலைவர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக அதிகாலை முடிக்கப்பட்டன இதனால் காலை 8 மணி முதல் போக்குவரத்து சீரானது.

நள்ளிரவு நேரத்திலும் கூட பேரிடர் காலத்தில் மக்களுக்கு ஏற்படும் அபாயத்திலிருந்து காப்பாற்றிய நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா உள்ளிட்ட கழகத் தோழர்களுக்கு பொதுமக்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

இதற்கிடையே இன்று காலை குன்னூர் நகராட்சி அலுவலகத்தில் துணைத் தலைவர் வாஷிம் ராஜா உடனடியாக அதிகாரிகளுக்கு பேரிடர் காலத்தில் ஏற்படும இடையூறுகளை தடுக்கும் விதமாக புரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நகராட்சி அலுவலகத்தில் தயாராக வைத்திருக்கும் படியும் மேற்கொண்டு ஏதேனும் இழப்புகள் ஏற்படாதவாறு அனைவரும் விழிப்புடன் பணியாற்றிட நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்..

அவருடன் கவுன்சிலர் மணி, சிக்கந்தூர் பத்மநாதன் உள்ளிட்ட கழகத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வழக்கறிஞர் நா. குப்புசாமி**

**அக்டோபர் 16 (1994)**



**இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.**

**தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.**

**கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.**

**கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**